**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் புரிய உதவும் வகையில் அவர்களுக்கு 2010–2011ம் நிதியாண்டில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கிட தொடராணை மற்றும் ரூ.55,35,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத்(மா.திந. 2) துறை

அரசாணை(நிலை) எண்.39 நாள்:12–07– 2010

ஆனி 28, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசாணை(நிலை) எண். 153, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 25.11.2009.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண். 5384/ மா.திந. 3(1)/2010, நாள் 1.6.2010.

------

**<u>ஆணை:</u>**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் புரிய உதவும் வகையில் அவர்களுக்கு 2009–10 ம் நிதியாண்டு முதல் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படும் என மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து இரு கைகளும் நல்ல நிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கவும் 1350 பயனாளிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்திற்கு ரூ. 55,35,000/– நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி மூலம் 1350 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்கப்பட்டது என்று தெரிவித்து, 2010–11ம் ஆண்டில் இத்திட்டத்தில் 1495 மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் ஒன்று ரூ.3,700/– வீதம் அரசு விதிகளின்படி வாங்கி இரு கைகளும் நல்ல நிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைபாடுயுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கிட ஆணை வழங்குமாறும் தையல் இயந்திரங்களின் விலை குறைவாக இருப்பின், அரசின் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டுத் தொகைக்கு ஏற்ப கூடுதலாக வாங்கிடவும், உத்தேச செலவினத் தொகையைக் காட்டிலும், தையல் இயந்திரங்களின் விலை அதிகமாக இருப்பின் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்குள் எவ்வளவு எண்ணிக்கை வாங்க இயலுமோ அதற்கேற்ப வாங்கிடவும் அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இத்திட்டத்தினை 2010–11ம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட ரூ.55.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**2.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்து, அதனை ஏற்றுக் கொண்டு பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது.

i. **2010–11** ஆம் நிதியாண்டில் **1495** பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் ஒன்று ரூ.**3,700/–** வீதம் வாங்குவதற்கென ரூ. **55.35** இலட்சம் (ரூபாய் ஐம்பத்தைந்து இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

ii. இரு கைகளும் நல்ல நிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படும்.

iii. இந்த தையல் இயந்திரங்களை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** மற்றும் விதிகள் **2000**–ன்படி ஒப்பந்த புள்ளி மூலம் கொள்முதல் செய்திட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது

**3.** மேலே பத்தி **2**–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> " **2235**– சமூக பாதுகாப்பும் நலனும்–**02**– சமூக நலன்–**101**–மாற்றுத் திறனாளிகள் நலன் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் –MK–மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்குதல் – **19**–இயந்திரமும் சாதனமும் –**01**– வாங்குதல்".
>
> (த.தொ. கு. 2235–02–101–MK 1915)

**6.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண். நிதி(சந)/**34127/2010**, நாள் **07.07.2010**ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**6**.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–**5/35**.
மாநில தலைமைக் கணக்காயர்–**9/18/35**.
மாநில தலைமைக் கணக்காயர் –**18/35** (பெயரில்)

**<u>நகல்:</u>**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–**9**.
அரசு செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–**9**.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.